இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 55 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 19 – ஞாயிற்றுக்கிழமை 05 அக்டோபர் 2025 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 55 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 19 - Sunday 05 October 2025 - Madurai 10 Pages ₹ 5.00


## சிறப்புப் புலனாய்வுக் குழு மூலம் முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவோம்!

# நீண்ட காலத் தீர்வை நோக்கிப் பயணிப்போம்!

## கரூர் சம்பவம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைநோக்குச் செய்தி!

சென்னை, அக். 5 -

**கரூர் துயரச் சம்பவத்தில், சிறப்புப் புலனாய்வுக் குழு மூலம், முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதிபட கூறியுள்ளார். துடைக்க முடியாத இந்தத் துயரச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் நோக்கோடு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல் ஒரு நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்போம் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.**

கரூரில் நடிகர் விஜய்யின் பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியானது தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி செந்தில்குமார் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. கரூர் நிகழ்ச்சி நடத்தப்பட்ட விதம் குறித்தும் சம்பவம் நிகழ்ந்ததும் தவெக நிர்வாகிகள் தலைமறைவானது குறித்தும் நீதிபதி கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

கரூர் விபத்து மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு என கண்டனம் தெரிவித்த நீதிபதி, கரூர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு கருணை காட்டவே முடியாது என்று கூறினார்.

கட்டுப்படுத்தப்படாத கலவரம் நடைபெறுவதை போல நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறார்கள், கரூர் துயரத்திற்கு த.வெ.க. வருத்தம் கூட தெரிவிக்கவில்லை இது அக்கட்சித் தலைவரின் மன நிலையை காட்டுகிறது என்ன மாதிரியான கட்சி இது? என சரமாரியாக நீதிபதி கேள்வி எழுப்பினார். கரூர் சம்பவத்தில் நீதிமன்றம் கண்மூடி வேடிக்கை பார்க்க முடியாது எனவும் நீதிபதி காட்டமாக தெரிவித்தார். நிகழ்ச்சிக்காக காவல்துறை விதித்த ஒன்றிரண்டு நிபந்தனைகள் தவிர மற்ற நிபந்தனைகள் அனைத்தும் மீறப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்றும், விஜய்யின் பிரச்சார வாகனத்தை பறிமுதல் செய்திருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

கரூரில் துயர சம்பவம் நடந்தவுடன் கட்சி தொண்டர்களையும், மக்களையும் அப்படியே விட்டு விட்டு அக்கட்சியின் தலைவரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் ஒடி ஒளிந்து தலைமறைவாகி விட்டார்கள் விஜய் கட்சியினருக்கு குறைந்தபட்ச பொறுப்புக் கூட இல்லை மற்ற கட்சியினர் எல்லாம் உதவிக்காக விரைந்த போது நிகழ்ச்சியை நடத்திய தவெகவினர் காணாமல் போனது ஏன் என்று நீதிபதி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

அரசியல் கட்சிக்கான குறைந்தபட்ச சமூகப் பொறுப்பை கூட த.வெ.க. பின்பற்றவில்லை என்றும் விஜய்க்கு தலைமைத்துவ பண்பே இல்லை எனவும் நீதிபதி செந்தில்குமார் கடும் விமர்சனத்தை முன்வைத்தார். கரூர் சம்பவம் தொடர்பான வழக்கை விசாரிக்க, வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில், நாமக்கல் எஸ்.பி. அடங்கிய சிறப்பு புலனாய்வு குழுவை நியமித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில் இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**கரூர் துயரம் குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் கூறியுள்ள கருத்துகள், வழிகாட்டுதல்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகத் தீவிரமாக கவனத்தில் கொண்டு செயலாற்றி வருகிறது என்று தெரிவித்துள்ளார். கரூரில் நடந்த துயரத்தால் நாம் அனைவருமே நெஞ்சம் கலங்கிப் போயிருக்கிறோம். தம் அன்புக்குரியோரை இழந்து தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் கண்ணீரையும் கண்டு தவிக்கிறேன் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.**

**உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு தனது விசாரணையைத் தொடங்கும் என்றும், இதன் மூலம், முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவோம் என்று மாநிலத்தின் முதலமைச்சராக மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார். அனைத்து மட்டங்களிலும் பொறுப்பு உறுதிசெய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.**

### நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்!

**பலவற்றிலும் இந்தியாவுக்கே முன்னோடியான தமிழ்நாடு, கூட்ட நெரிசல் விபத்துகளைத் தவிர்ப்பதிலும் நாட்டுக்கு வழிகாட்டும். மாநிலம் முழுவதும் துறைசார் வல்லுநர்கள், அரசியல் கட்சியினர், செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரோடும் கலந்தாலோசித்து ஒரு முழுமையான 'நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) வடிவமைப்போம் என்றும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் பின்பற்றத்தக்க மாடலாக இது அமையும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.**

### அனைவரது ஆலோசனைகளையும் வரவேற்கிறேன்!

**துடைக்க முடியாத இந்தத் துயரச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் நோக்கோடு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல் ஒரு நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்போம் என்றும், இந்தக் கூட்டு முயற்சியில் அனைவரது யோசனைகள், ஆலோசனைகளையும் வரவேற்கிறேன் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**ஒவ்வொரு உயிரும் விலை மதிப்பில்லாதது. நம் மக்களின் இன்னுயிரைக் காக்கவும், இனி இப்படி ஒரு பெருந்துயரம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே நிகழாமல் தடுக்கவும் ஒன்றிணைவோம்! என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்புவிடுத்துள்ளார்.**




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், அரூர் மற்றும் வந்தவாசி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

### த.வெ.க.வினரின் மோசமான திட்டமிடலே

# கரூரில் 41 பேர் உயிரிழப்புக்குக் காரணம்!

### 'தி இந்து' கள ஆய்வு நடத்தி தகவல்!

சென்னை, அக். 5 -

கரூரில் 41 பேர் உயிரிழப்புக்கு, விஜய் கட்சியினரின் மோசமான திட்டமிடலே காரணம் என கரூரில் கள ஆய்வு நடத்தி, 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

கரூரின் மோசமான நாளாக அமைந்தது செப். 27 விஜய்யின் அலட்சியமான செயலால், 10 குழந்தைகள் உட்பட 41 உயிர்களின் மறைவு, வேலுச்சாமிபுரத்தில் ஆறாத வடுவை விட்டுச் சென்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக, கரூரில் ஆய்வு நடத்திய 'தி இந்து' நாளிதழ், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரையும், சம்பவத்தை நேரில் பார்த்தவர்களையும் சந்தித்து, அவர்களின் கருத்துக்களை சிறப்பு கட்டுரையாக வெளியிட்டுள்ளது.

அதில், சனிக்கிழமை நிகழ்வு முன்னெப்போதும் சந்தித்திராத பேரிடர் என பொதுமக்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பேரிடருக்கு, விஜய் கட்சியினரின் மோசமான திட்டமிடுதலே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை 10 மணிக்கே கூட்டம் வரத் தொடங்கிய நிலையில், நேரம் செல்லச் செல்ல, குழந்தைகள், பெண்கள் என கூட்டம் கட்டுக் கடங்காமல் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், சனிக்கிழமை மாலை கரூரில் ஜவுளித் தொழிலாளர்கள் தங்கள் கூலியை பெறும் நேரம் என்பதால், ஏற்கனவே கூட்டம் அதிகமாகவே இருக்கும். அந்த நேரத்தில் விஜய் பிரச்சாரம் செய்ய தேர்ந்தெடுத்தது மிக மோசமானது என பொதுமக்கள் கூறியுள்ளதாக 'தி இந்து' நாளிதழ் தெரிவித்துள்ளது.

திட்டமிடப்பட்ட நேரத்திற்கு விஜய் வந்திருந்தால் அசம்பாவிதம் ஏதும் நிகழ்ந்திருக்காது என்றும், ஆனால் பல மணி நேரம் கழித்து தாமதமாக வந்ததே, கூட்டம் அலைமோதி நெரிசலை உண்டாக்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல மணி நேரம் சுடும் வெயிலில் காக்க வைக்கப்பட்ட மக்களுக்கு, குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட செய்து தரவில்லை என விஜய் கட்சியினர் மீது அடுக்கடுக்கான புகார்களை, வேலுச்சாமிபுர மக்கள் வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வெயிலின் தாக்கத்தால் குழந்தைகள் மயக்கமடைந்தனர்.

விஜயின் கவனத்தை ஈர்க்க, இளைஞர்கள் பலர் மின்மாற்றிகளில் ஏறி அட்ராசிட்டியில் ஈடுபட்டதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு முன் கரூரில் பல கட்சிகள் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியுள்ளதாகவும், அதிக அளவில் மக்கள் கூடியுள்ளதாகவும் ஆனால் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை என மக்கள் கூறுகின்றனர். பிரச்சாரம் நடக்கும் இடத்திற்கு இரவு 7 மணிக்கு விஜய்யின் வாகனம் வந்த போது, காலையில் இருந்து காத்திருந்த ரசிகர்கள், அவரது வாகனத்தை நோக்கி பாய்ந்ததால் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

41 பேர் பலியான நிலையில், அவர்களது குடும்பத்தினரையோ அல்லது காயமடைந்தவர்களையோ விஜய் இதுவரை சந்திக்காததும், கொடுந்துயரம் நிகழ்ந்து 3 நாட்களுக்குப் பிறகே விஜய் ஒரு வீடியோ பதிவை வெளியிட்டதும் பொதுமக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகி இருப்பதாக 'தி இந்து' நாளிதழ் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளது.

### பேரழிவைச் சந்தித்த வயநாடு மக்களுக்கு

# ஒன்றிய அரசு நிவாரண நிதி வழங்க மறுப்பு!

### பிரியங்கா காந்தி எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, அக். 5 -

பேரழிவைச் சந்தித்த வயநாடு மக்களுக்கு உரிய நிவாரண நிதியை வழங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பதாக, வயநாடு எம்.பி. பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில்,



மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பேரழிவைச் சந்தித்த வயநாடு பகுதி மக்களின் வாழ்க்கையை மீட்டுருவாக்கம் செய்ய, கேரள அரசு 2 ஆயிரத்து 221 கோடி ரூபாய் கோரியதாகவும் ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு வெறும் 261 கோடி ரூபாய் மட்டும் வழங்கியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

நிலச்சரிவில் வீடு, வாழ்வாதரங்களுடன் அன்பிற்குரியவர்களையும் பறி கொடுத்த வயநாடு பகுதி மக்கள், பிரதமரின் வருகைக்குப் பின்னர் அர்த்தமுள்ள உதவியை எதிர்பார்த்திருந்ததாகவும், ஆனால் அவர்களுக்கு ஒன்றிய அரசு புறக்கணிப்பை பரிசாக வழங்கியுள்ளதாக சாடியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பது அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்என அறிவுறுத்தியுள்ள பிரியங்கா காந்தி எம்.பி, நிதி, ஆதரவு மற்றும் கண்ணியத்தை தவிர வேறு ஒன்றையும் ஒன்றிய அரசிடமிருந்து வயநாடு மக்கள் எதிர்பார்க்கவில்லை என தெரிவித்துள்ளார்.

### இந்தியா புல்டோசர் மூலம் ஆளப்படக் கூடாது!


# சட்டத்தின் ஆட்சியால் மட்டுமே ஆளப்படவேண்டும்!

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கருத்து!

புதுடெல்லி, அக். 5 -

இந்தியா புல்டோசர் மூலம் ஆளப்படக் கூடாது, சட்டத்தின் ஆட்சியால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெளிவான உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

மொரிஷியஸ் நாட்டில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பீ.ஆர்.கவாய் மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.



மொரிஷியஸ் பல்கலைகழக நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், ஜனநாயகத்தில் சட்டத்தின் ஆட்சி என்ற தலைப்பில் உரையாற்றினார்.

சட்டம் மட்டுமே நியாயத்தை அல்லது நீதியை வழங்காது என்ற அவர், சட்டப்பூர்வமாக்கப்படும் அனைத்தும், நீதியானது என்று அர்த்தமல்ல என்றும், இந்த வேதனையான உண்மைக்கு வரலாற்றில் பல சான்றுகள் இருப்பதாகவும் கூறினார்.

புல்டோசர் வழக்கில் கடந்த ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து பேசிய அவர், இந்திய சட்ட அமைப்பு புல்டோசர் ஆட்சியால் அல்ல, சட்டத்தின் ஆட்சியால் நிர்வகிக்கப்படுகிறது என்ற தெளிவான செய்தியை அந்த தீர்ப்பு அளித்தது என கூறினார்.

உச்சநீதிமன்றம் சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு நிலைநிறுத்தியது என்பதற்கு குஜராத் பில்கிஸ்பானு வழக்கு உள்ளிட்ட 4 வழக்குகளின் தீர்ப்புகளை அவர் சுட்டிக்காட்டினார்.

பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் குஜராத் அரசால் விடுவிக்கப்பட்டதை ரத்து செய்த தீர்ப்பு, தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை பெறும் சட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டது, முத்தலாக் வழக்கு ஆகியவற்றையும் குறிப்பிட்டு பி.ஆர்.கவாய் பேசினார்.